# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1868/15 - 2014 ජුනි මස 25 වැනි බදාදා - 2014.06.25

*1868/15 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**கிழக்கு மாகாண மாகாண சபை**

2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கிழக்கு மாகாண வீதிப்பயணப் போக்குவரத்து அதிகார சபை (திருத்த) நியதிச்சட்டம் 2014, மே மாதம் 27 ஆந் திகதி சபையில் நிறைவேற்றப்பட்டது என்பதனையும் இதற்கான கௌரவ ஆளுநரின் ஒப்புதல் 2014, யூன் மாதம் 06 ஆந் திகதி பெறப்பட்டது என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

எம். சி. எம். செரிப் (f),
மாகாண சபைச் செயலாளர்,
கிழக்கு மாகாண மாகாண சபை.

மாகாண சபைச் செயலகம்,
கிழக்கு மாகாண மாகாண சபை,
திருகோணமலை,
2014, யூன் 19.

**2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கிழக்கு மாகாண வீதிப்பயணப் போக்குவரத்து அதிகார சபை (திருத்த) நியதிச் சட்டம்.**

2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கிழக்கு மாகாண வீதிப்பயணப் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு நியதிச் சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கிழக்கு மாகாண சபையினால் கீழ்க்காட்டப்படுமாறு ஆக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் அமுலுக்கு வரும் திகதியும்.

1. இந்நியதிச் சட்டம் "2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கிழக்கு மாகாண வீதிப்பயணப் போக்குவரத்து அதிகார சபை (திருத்த) நியதிச் சட்டம்" என அடையாளப்படுத்தப்படுவதுடன் கிழக்கு மாகாண ஆளுநரின் இசைவு பெறப்படுகின்ற அத்தகைய தினத்தில் அமுலுக்கிடப்படுதலும் வேண்டும்.

அடிப்படை நியதிச் சட்டத்தின் பிரிவு 36 ஐத் திருத்துதல்.

2. 2009 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கிழக்கு மாகாண வீதிப்பயணப் போக்குவரத்து அதிகாரசபை நியதிச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் அடிப்படை நியதிச் சட்டம் எனக் குறித்துக் காட்டப்படும்) பிரிவு 36 உட்பிரிவு (2) மற்றும் பந்தி (அ) என்பன இத்தால் கீழ்க்காட்டப்படுமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

"(2) அதிகார சபையின், கீழ் விபரிக்கப்படும் பெறுகைகள் யாவும் முதற்கண் மாகாண நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதிகார சபையின் தேவைகளின் அடிப்படையில் பின்னர் கணக்கிற்குக் கொடுப்பனவு செய்யப்படுதலும் வேண்டும் .

(அ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதிகார சபையானது தனது அதிகாரங்களை பிரயோகிக்கின்ற அல்லது கடமைகளை நிறைவேற்றுகின்ற அத்தகைய சந்தர்ப்பங்களில் வழங்கப்படுகின்ற அல்லது புதுப்பிக்கப்படுகின்ற அனுமதிச் சீட்டுக்களின் மூலம் கிடைக்கப்பெறுகின்ற அத்தகைய பெறுகைகள்"

ஒவ்வாமை ஏற்படுமிடத்து தமிழ் மொழி உரையே மேலோங்கி நிற்றல்.

3. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

7 - 240

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.